# தமிழ் கவிதைகள் - சில குறிப்புகள்

முத்து அண்ணாமலை, ஏப்ரல் 7, 2019

ஏவர்டு, கலிபோனியா.
http://tamilpesu.us

- தமிழ் சொல் என்ன ? basketball, entreprenuer ?
- நமது மொழி - தமிழின் தன்மைகள் :
    - Phonetic, Diglossic, Agglutinative language with Alpha Syllabary script.
- பண் : கர்நாடக இசையினையும் முதன்மையானது என்றும் சொல்வார்கள். இது நம்மிடம் பிழைத்து முழுதாக கிடைக்கவில்லை - அதாவது வரலாற்றில் அழிந்தது.
- திருக்குறள்:

    அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

    பகவன்முதற்றே உலகு.
- தமிழ் கவிதைகள் / இலக்கியம் : சங்ககாலம்  [100 கி.மு]
    - "நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்

      கற்றறிந்தார் ஏத்தும் கலியோடு அகம் புறம் என்று இத்திறத்த எட்டுத் தொகை".
    - அகம், புறம்: அகநானூரு, புறநானுரு
    - ஐந்து திணைகள் : குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என்பனவே தமிழர் நிலத்திணைகள் ஆகும்.
        - மலையும் மலை சார்ந்த இடமும் **குறிஞ்சி**த் திணை
        - காடும், காடு சார்ந்த நிலமும் **முல்லை**த் திணை
        - இவையிரண்டுக்கும் இடையில் அமைந்த பாழ் நிலம் **பாலை** எனப்பட்டது.
        - வயலும் வயல் சார்ந்த நிலமும் **மருதம்** எனவும்,
        - கடலும் கடல் சார்ந்த இடம் **நெய்தல்** எனவும் அழைக்கப்பட்டன.
    - மேலும் பார்க்க:

https://sangamtamilliterature.wordpress.com/18-சங◌்க-இலக்கிய-நூல்கள்/

- தொகை, அசை, சீர்
- எதுகை, மோனை

**எதுகை – பேரா. பசுபதி.**

எதுகை என்பது இருசீர்களின் இரண்டாம் எழுத்து ஒன்றுவது எனச் சொல்லலாம். காட்டுகள்: கற்று–பெற்று, பாடம்–மாடம், கண்ணன்–வண்ணன்.

ஆனால் எதுகைக்கு இரண்டாம் எழுத்து ஒன்றினால் மட்டும் போதாது. முதல் எழுத்துகளும் அளவில் ஒத்துப் போக வேண்டும். அதாவது முதல் எழுத்து குறிலானால், எதுகைச் சீரிலும் முதல் எழுத்துக் குறிலாக வேண்டும். நெடிலாக இருப்பின், எதுகைச் சீரிலும் நெடிலாக வேண்டு. (இது பலரும் செய்யும் தவறு). (எ–கா) தட்டு–பட்டு... எதுகை; ஆனால் தட்டு–பாட்டு எதுகையல்ல.

சிலசமயம், மூன்றாம் எழுத்து ஒன்றினால்தான் ஒத்த ஓசை கிடைக்கும் (எ–கா) பண்டு– உண்ண ஓசையினிமை இல்லை. பண்டு, கண்டு, உண்டு இவை மிகச்சரியான எதுகைகள். அதனால் முதல் எழுத்து அளவில் ஒன்றி, முடிந்தவரை மற்ற எழுத்துகள் ஒன்றுவது சிறப்பு; குறைந்தபட்சம் இரண்டாவது எழுத்தாவது ஒன்ற வேண்டும்.

சில சிறப்பில்லா எதுகைகளும் உண்டு. இவற்றில் முக்கியமானவை வருக்க எதுகை, இன எதுகை, ஆசிடை இட்ட எதுகை.

**இயைபு**

அடித்தொடக்கத்தில் வருவது எதுகை. அடியிறுதியில் ஓரெழுத்தோ, பல எழுத்துகளோ ஒன்றிவருவது இயைபு.

(எ–கா)
நந்தவ னத்திலோ ராண்டி – அவன்
நாலாறு மாதமாய் குயவனை வேண்டி,
கொண்டுவந் தானொரு தோண்டி – அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி!

இதில் ”ண்டி” என்ற எழுத்துகள் ஒன்றி வருகின்றன. (நந்த–கொண்டு – மெல்லின எதுகை)
————————
இனி அடுத்த பகுதியில் பாவலர் பெருந்தகை பேரா. பசுபதியின் மோனை பற்றிய விளக்கத்தைத் தருகிறேன்.

- பார்க்க : https://tyagas.wordpress.com/2011/05/05/எதுகை-என்றால்-என்ன/
- 'டுயட்' படத்தில் 'அஞ்சலி அஞ்சலி' பாடலை இசையளவில் மட்டுமாவது, பாடல் வரிகளுடன் காட்டலாம் என்று திட்டம்.

அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி
பூவே உன் பாதத்தில் புஷ்பாஞ்சலி
பொன்னே உன் பெயருக்கு பொன்னாஞ்சலி
கண்ணே உன் குரலுக்கு கீதாஞ்சலி
கண் கானா அழக்திற்கு கவிதாஞ்சலி

காதல் வந்து தீண்டும் வரை இருவரும் தனித்தனி
காதலின் பொன் சங்கிலி இணைத்தது கண்மணி
கடலிலே மழைவீழ்ந்தபின் எந்தத்துளி
மழைத்துளி
காதலில் அதுபோல நான் கலந்திட்டேன் காதலி
திருமகள் திருப்பாதம் பிடித்துவிட்டேன்
தினமொரு புதுப்பாடல் படித்துவிட்டேன்
அஞ்சலி அஞ்சலி என்னுயிர்க் காதலி

சீதையின் காதல் அன்று விழி வழி நுழைந்தது
கோதையின் காதலின்று செவி வழி புகுந்தது
என்னவோ என் நெஞ்சிலே இசை வந்து துளைத்தது
இசை வந்த பாதை வழி தமிழ் மெல்ல நுழைந்தது
இசை வந்த திசை பார்த்து மனம் குழைந்தேன்
தமிழ் வந்த திசை பார்த்து உயிர் கசிந்தேன்
அஞ்சலி அஞ்சலி இவள் தலைக்காதலி ...

https://www.youtube.com/watch?v=4I3ROkH7Oo4